# ஒரு மனுஷன் எப்படி பாவி ஆகிறான் ? எப்படி நீதிமான் ஆகிறான் ?

அன்பு சகோதர, சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த வேத பாடத்தில் நாம் ஒரு ஒரு மனுஷன் எப்படி பாவி ஆகிறான் ? எப்படி நீதிமான் ஆகிறான் ? என்று படிக்கப்போகிறோம். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ***( எபேசி; 1; 3 ).*** நமக்கும் நம் தேவனுக்கும் இடையேயான உறவு ஒரு நல்ல வலுவான நிலையில் இருக்க வேண்டுமென்றால் இந்த இரண்டு கேள்விகளுக்குமான பதிலை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இந்த இரண்டு காரியங்களும் சரிவர புரியாத ஒரு விசுவாசி, தன் கிரியைகளால் (அல்லது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் ) தேவனுக்கு முன்பதாக நீதிமான் ஆக முயற்சிக்கக்கூடும். ஆனால் அதன் விளைவைப்பற்றி அப். பவுல் இப்படியாக கூறுகிறார்,

*" **கலா 5:4** நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.*

***ரோம 3:20** இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. ".*

நீங்கள் உண்மையில் இயேசுவை மனதார சிநேகிப்பவர்கள், ரட்சிக்கப்பட்டவர்கள் என்றால் - அவருக்காக வாழத்துடிப்பவர்கள். அவர் தன் வசனங்களில் குறிப்பிட்டிருக்கிற எல்லாவற்றையும் பின்பற்றி நீதிமானாக வாழ முயற்சிக்கிறவர்கள். என்றாலும் சில சமயங்களில் தவறும் போது பாவ மனசாட்சியினாலும், குற்ற உணர்வுகளாலும் குத்தப்பட்டவர்களாகி விடுகிறீர்கள். தேவன் உங்களை தண்டிப்பார் என்றும், தேவனுக்கு பிரியமான நிலையில் நீங்கள் இல்லை என்றும், ரட்சிப்பை இழந்து விடுவோம் என்றும் வருத்தப்படுகிறீர்கள். மீண்டும் தேவனுக்கு பிரியமான நிலையில் வளர, ஆக முயற்சிக்கிறீர்கள். **இப்படி முன்பும் பின்புமான ஒரு நிலையில் இருக்க தேவை இல்லை. தேவனின் அன்பில் நிலைத்து, அவரோடு ஒரு நல்ல உறவில் நீங்கள் வாழலாம். அதற்கு அடிப்படையாக இந்த இரண்டு கேள்விகளையும் அவற்றின் பதில்களையும் அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.**

இவற்றை படிப்பதற்கு முன்பதாக ஒரு காரியத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். *" **ரோம 3:8** நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா? நாங்கள் அப்படிப் போதிக்கிறவர்களென்றும் சிலர் எங்களைத் தூஷித்துச் சொல்லுகிறார்களே; அப்படிப் போதிக்கிறவர்கள்மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும். ".* அப்.பவுல் "கிருபையினால் நீதி" என்ற உபதேசத்தை ரோமருக்கு எழுதும்போது, தேவனுடைய மகா பெரிய கிருபையை விளக்குகிறார். அப்படி விளக்கும்போது, நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுமாறு போதித்துக்கொண்டிருந்த சிலர், பவுல் அப்போஸ்தலன் " பாவம் செய்யலாம் என்று போதிக்கிறார் " என்று அவரைப்பற்றி தூஷித்து சொல்லுகிறார்கள். அப்படி சொல்லுகிறவர்களைப்பற்றி அவர் சொல்கிற வசனம் இது. இப்போதும் கிருபையை சரியாக நாங்கள் போதிக்கும் போது, **" பாவம் செய்யலாம் என்று போதிக்கிறார்களா "?** என்ற கேள்வி நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டு வாழுகிறவர்கள் மனதில் எழ வாய்ப்புண்டு. **வேதாகமம் ஒரு போதும் பாவம் செய்யலாம் என்று போதிப்பது இல்லை. நாங்களும் அப்படி போதிப்பது இல்லை. பாவம் செய்யாதீர்கள். பாவத்தின் சம்பளம் மரணம் ( துன்பம், துக்கம், நோய், இல்லாமை, குற்ற உணர்வு..... ). இதன் பின்னும் நாங்கள் " பாவம் செய்யலாம் என்று போதிக்கிறோம் " என்று யாராவது பேசுவார்களானால், அவர்கள் ரோமர் 3;8 ஐ கருத்தில் கொள்ளுமாறு மிகத்தாழ்மையாக கேட்டுக்கொள்கிறோம்.**

## பாவம்.

முதலில் நாம் வேதாகமத்தில் " பாவம் " என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற வார்த்தையின் அர்த்தம் என்ன என்று பார்ப்போம். W.E. வைன் என்ற, கிரேக்க மொழிபெயர்ப்பில் தலை சிறந்த வேத பண்டிதர் தன் " வேத வார்த்தைகளின் அகராதி " யில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

புதிய ஏற்பாட்டில் பாவம் என்ற வார்த்தையை குறிக்க கீழ்க்கண்ட 5 கிரேக்க வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

## 1. " ஹமர்ஷியா ". ( பெயர்ச்சொல் ).

இந்த வார்த்தையின் அர்த்தம் " **குறி தப்புவது** ". ஆனால் புதிய ஏற்பாட்டில் இந்த சொல் இலக்கணத்தில் இந்த வார்த்தை உபயோகிக்கப்பட வில்லை. புதிய ஏற்பாட்டில் இந்த ஹமர்ஷியா என்கிற வார்த்தை **"நீதி நெறியில் இருந்து சாய்வது "** என்ற அர்த்தத்தை குறிக்கும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வார்த்தை கீழ்க்கண்ட அர்த்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**அ.** இவ்வார்த்தை "பாவத்தை" ஒரு **" பிரமாணமாக " "கிரியைகளின் உற்பத்தி ஸ்தானமாக", "நம்முள்ளில் இருந்து நம் செய்கைகளை நடத்துகிற மூலப்பொருளாக"** சித்தரிக்கும்படியாக கீழ்க்கண்ட இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.
ரோமர்; 3;9, 5;12,13,20. 6;12 7;7,9,11,13

**ஆ.** இவ்வார்த்தை "பாவத்தை" ஒரு **" ஆளும் சக்தியாக "** ரோமர்; 6;6 ல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே "பாவம்" **நம் சரீரத்தின் மூலமாக கிரியைகளை நடப்பிக்கிற ஒரு ஆளும் சக்தியாக** சித்தரிக்கப்பட்டுள்ளது.
கீழ்க்காணும் வசனங்களில் " இந்த ஆளும் சக்திக்கு " ஒரு **" மானிட உருவம் "** கொடுக்கப்பட்டுள்ளது.
ரோமர்; 5;21 6;12,14,17 7;11,14,17,20,23,25 8;2 1 கொரி; 15;56 எபிரேயர்; 3;13 11;25 12;4 யாக்;1;15.

**இ.** பாவத்தை ஒரு உறுதியான தப்பு செயலாக.
யோவான்; 8;21,34,46 9; 41. 15;22,24 19;11 ரோமர்; 8;3 எபி;9;26 10; 6,8,18 13;11 1யோவான்; 1;7,8 3;4 ரோமர்; 1;32 கலா; 5;21 பிலிப்; 4;9 1 பேது; 4;9
பாவத்தை **"பாவ நிலமையை"** குறிக்கிற சொல்லாக. 1 கொரி; 15;17, யோவான்; 1;29
பாவத்தை ஒரு **"தொடரும் நிலமையை"** குறிக்கிற சொல்லாக. 1 தெச; 2;16 1 யோவான்; 5;16

**ஈ;** பாவத்தை ஒரு **"பாவ செய்கையாக"** ;
மத்; 12;31 அப்; 7;60 யாக்; 1;15 2;9 4;17 5;15,20 1 யோவான்; 5;16

**குறிப்பு;** 1. இயேசுவிடம், மேலே அ,ஆ,இ பகுதிகளில் கூறப்பட்டுள்ள "பாவமும்", 'ஈ' பகுதியில் கூறப்பட்டுள்ள "பாவசெய்கையும் "இல்லாமல் இருந்தது.

## 2. ஹமர்டமா; ( பெயர்சொல்; )

**தேவ நீதிக்கு கீழ்ப்படியாத ஒரு செயலை** குறிக்கிற விதமாக( பாவங்கள் ).பன்மையில் உபயோகிக்கப்பட்டுள்ள இடங்கள். மாற்கு; 3;28,29 ரோமர்; 3;25, 1 கொரி; 6;18. 2 பேது; 1;9.
**" பரப்டோமா "** என்னும் வார்த்தை இதே அர்த்தத்தில் ( பாவங்கள் ) கீழ்க்கண்ட இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. எபே; 1;7 2;5 கொலோ; 2;13 யாக்; 5;16 .

## 3. அனமர்டெடோஸ்.

**" பாவமில்லாத "** என்ற அர்த்தத்தில். யோவான்; 8;7. ( பாவ செய்கை இல்லாத )

## 4. ஹமர்டனோ. ( வினைச்சொல் ).

இந்த வார்த்தை **குறிதப்புவது** என்ற அர்த்தத்தில் **பாவம்** என்று புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**அ.** தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வதை சித்தரிக்கும்படியாக; 2 பேது; 2;4 மத்; 27;4 லூக்;

15;18,21 யோவான்; 5;14 8;11 9;23 ரோமர்; 2;12 3;23 5;12,14,16 6;15
1கொரி;7;28,36 15;34 எபே; 4;26 1 தீமோ;5;20 தீத்து; 3;11 எபி; 3;17, 10;26
1 யோவான்; 2;1 ல் "பாவச்செயலை" சித்தரிக்கும்படியாக.
1 யோவான் 3;16 ல் " தொடர்ந்து பாவத்தை அனுஷ்டிப்பது "
1 யோவான் 5;16 ல் "மரணத்துக்கு ஏதுவான நிலமையை உருவாக்குகிற ஒரு செயல்"

**ஆ.** இயேசுவுக்கு விரோதமாக பாவம் செய்வது 1 கொரி; 8;12

**இ.** மனிதனுக்கு விரோதமாக பாவம் செய்வது மத்; 18; 15,21 லூக்; 17; 3,4 1 கொரி; 8;12

**ஈ.** யூதபிரமாணங்களுக்கு, தேவாலயத்துக்கு, ராயனுக்கு - விரோதமாக பாவம் செய்வது; அப்; 25;8

**உ.** தன் சுய சரீரத்துக்கு விரோதமாக பாவம் செய்வது; 1 கொரி; 6;18.
எஜமானுக்கு விரோதமாக; 1 பேது; 2;20.

5. ப்ரோமார்டனோ; **(வினைச்சொல்.)**
முன்பு பாவம் செய்த... 2 கொரி; 12;21. 13;2

வேதாகமத்தில் ரோமருக்கு எழுதப்பட்ட நிரூபத்தில் " **பாவம்** " என்னும் வார்த்தை சுமார் 45 இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. **பாவங்கள்** என்னும் வார்த்தை சுமார் 4 இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 49 இடங்களில் 47 இடங்களில் பாவம் என்னும் தமிழ் வார்த்தைக்கான மூல கிரேக்க வார்த்தை " **ஹமர்ஷியா** " **ஒரு** பெயர் சொல்லாக **உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.**

இவற்றில் இருந்து நாம் மனதிலாக்க வேண்டியது வேதாகமத்தில் " **பாவம்** " என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற சொற்கள் **எல்லாம்** ஒரு " **தனிப்பட்ட பாவ செயலை** " குறிப்பிடுவது அல்ல. பல இடங்களில் அது ஒரு **பெயர் சொல்லாக " பாவம் செய்ய தூண்டுகிற சக்தியாக "** குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே படிப்பவர்களும், பிரசங்கிப்பவர்களும் அந்த வார்த்தை எதைக்குறிக்கிறது என்று அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

## ஒரு மனிதன் எப்படி பாவி ஆகிறான்.?.

**சங்கீதம்; 51.5, ரோமர்; 3;23, ரோமர்; 5;12, ரோமர் 5;19, கலாத்தியர்; 3;2**2....இன்னும் பல வசனங்கள் " எல்லோரும் பாவிகள் " என்று விளக்குகிறது. இயேசு கிறிஸ்துவைப் பற்றி யோவான் குறிப்பிடும்போது.

***யோவா 1:29*** *........... இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." என்று கூறுகிறார்.*

***1யோவா 2:2*** *நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*

இந்த வார்த்தைகள் எல்லாம் " எல்லோரும் பாவிகள் " 'உலகத்தோர் எல்லோரும் பாவிகளே' என்ற அர்த்தத்தையே விளக்குகின்றன.

இயேசு " பாவிகளை ரட்சிக்கவே " வந்தார். ஒரு பாவியே ரட்சிக்கப்பட வேண்டும். பலரும் தாங்கள் **"பாவி"** என்று ஒத்துக்கொள்வார்கள். ஆனால் **" தாங்கள் எப்படி பாவி ஆனார்கள் "** ஏன் ஆனார்கள், எப்போது ஆனார்கள் என்பது போன்ற கேள்விகளுக்கு விளக்கம் அறியாமல் இருக்கிறார்கள். இதை அறியாமல் இருப்பதால் அவர்களது அஸ்திபாரம் உறுதியாகப்போடப்படாமல் இருக்கிறது. எனவே நாம் அதை அறிந்து கொள்வது இன்றியமையாதது.

ஆதியிலே தேவன் மனிதனை தன் சாயலாக சிருஷ்டித்தார். ***ஆதி 1:27*** *தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.*

*தேவன் ஆவியாயிருக்கிறார்.* ***யோவா 4:24*** *தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*

மனிதனின் ஆவியே உண்மையில் அவனுக்கு ஜீவனை கொடுக்கிறது. ***யாக் 2:26*** *அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும்செத்ததாயிருக்கிறது.*

மனிதன் தன் ஆவியிலேயே தேனோடு உறவு கொள்ள முடியும் ***யோவா 4:24*** *தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*

ஆவியாயிருக்கிற தேவன் மனிதனை " ஆவிக்குரிய மனிதனாக ஆத்துமாவோடும், சரிரத்தோடும் - சிருஷ்டித்தார் "

தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தில் வைத்து அவர்களுக்கு பல போதனைகளை கொடுத்து அவர்களோடு உறவாடிக்கொண்டிருந்தார். ( ஆதி; 1;28, 2;15-19 ). தேவன் அவர்களுக்கு கொடுத்திருந்த ஒரு கட்டளை ***ஆதி 2:17*** *ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.*

வஞ்சனையின் மூலமாக சாத்தான் அவர்களை அந்த கனியை புசிக்கும்படி செய்தான். மனுஷனுடைய கீழ்ப்படியாமையினால் பாவம் பூமியில் பிரவேசித்தது ( நுழைந்தது ). ஆதாம் **" பாவத்துக்கு "** கீழ்ப்பட்டவனானான். ( ***ரோம 6:16*** ) இச்சம்பவத்தினால் ஆதாம் **" பாவி "** ஆனான். தேவனுடைய ஆவியின் படி அவன் மரித்தான். இங்கே நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், இங்கே தேவன் குறிப்பிடுகிற மரணம் **" ஆவிக்குரிய மரணம் "** . அதாவது ஆதாமுடைய ஆவி, தேவனுடைய ஆவியோடு உறவு அற்றுப்போவது. சரீரப்பிரகாரமாக ஆதாம் 930 வருடங்கள் உயிரோடிருந்தான். **( குறிப்பு; கீழ்ப்படியாமை, பாவம், மரணம், இவற்றின் வரிசைப்பிரகாரம் , இன்னும் ஆழமான வேத படிப்புகளுக்காக நீங்கள் ஆவலுடையவர்களாக இருந்தால் அவற்றைப்பற்றிய எங்கள் மற்ற வேத பாடங்களை படிக்கவும் )**

ஆதாம் மனுக்குலத்தின் தகப்பன். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட போது சகல மனிதரும் அவனுக்குள், அவன் அரையில்

( in his loins - the seating of creative power ) இருந்தார்கள் என்று வேதம் குறிப்பிடுகிறது. இதை விளக்கும் ஒரு சம்பவம் எபிரேயர் 7; 1-10 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. *எபி 7:9 அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்,*

***எபி 7:10*** *தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்.*

மேலும் தேவன் மனுஷரை எல்லாம் ஒரே ரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார் என்று வசனம் சொல்லுகிறது. ( ***அப் 17:26*** )

ஆதாம் மனுக்குலத்தின் ஆவிக்குரிய, பௌதீக, தகப்பன். அவன் மனுக்குலத்தின் ஏக **பிரதிநிதி.** ஆதாம் பாவி ஆன போது மொத்த மனுக்குலமும் அவனுடைய அரையில் இருந்தது. ஆதாம் பாவி ஆன போது அவன் ஒரு தனி மனிதனாக செயல் பட வில்லை - ஒரு முழு மனுக்குலமாக செயல் பட்டான். அவன் பாவம் செய்த போது மொத்த மனுக்குலமும் பாவம் செய்தது. அவனுடைய ஆவி தேவனுடைய ஆவியினுடன் உள்ள உறவை இழந்த போது - மொத்த மனுக்குலமும் தேவனுடைய ஆவியினுடன் உள்ள உறவை இழந்தது. ஆதாம் மரித்த போது மொத்த மனுக்குலமும் மரித்தது.

இவற்றை அப். பவுல் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

***ரோம 5:12*** *இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.*

*13 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.*

*14 அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.*

*15 ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது.*

*16 மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல;அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபைவரமோ அநேககுற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது.*

*17 அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.*

*18 ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.*

*19 அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*

*20 மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது: அப்படியிருந்தும், பாவம் பெருகின* இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.

*21 ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது.*

**ஒரே மனுஷனாலே பாவம் உலகில் பிரவேசித்தது...... ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்தார்கள்....ஒருவனுடைய பாவம் அநேகரை ஆக்கினைக்குள்ளாக்கியது.....ஒருவனுடைய மீறுதலினாலே மரணம் ஆட்சிக்கு வந்தது......ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்படார்கள்......**

தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்புகிற அன்பு சகோதரா...சகோதரி...நீங்கள் நன்றாக மேற்கூறப்பட்ட வேத வசனங்களில் இருந்து புரிந்து கொள்ள வேண்டிய காரியம் - **" நாம் பாவி ஆனது ஆதாமுடைய பாவத்தால் ".** இதில் இருந்தே மற்ற எல்லா உபதேசங்களும் சரியாக புறப்பட முடியும்.

மற்றொரு காரியத்தையும் நாம் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும் **" நாம் பாவி ஆனது நம்முடைய பாவத்தால் அல்ல "**. ஏனென்றால், ஒரு மனிதன் ஒரு வேளை பாவம் ஒன்றும் செய்யாமல் வாழுவதாக இருந்தால் வேத வசனம் சொல்லுவது போல அவனை நாம் பாவி என்று சொல்லமுடியாது. எனவே **" நாம் பாவம் செய்து அல்லது செய்வதால் நாம் பாவி அல்ல....பாவம் செய்தாலும் செய்யாவிட்டாலும், ஆதாமில் இருந்த தோன்றிய எவரும் பாவியே "....**

**இப்படித்தான் நாம் பாவி ஆனது.**

## ஒரு மனிதன் எப்படி நீதிமான் ஆகிறான் ?.

ஆதாமில் இருந்த பிறந்த எல்லா மனிதரும் ஆதாமிடம் இருந்த " பாவ சுபாவத்தை " பெற்றுக்கொண்டனர். ***எபே 2:3*** *அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.*

இந்த பாவ சுபாவம் அவர்களை பாவம் செய்ய வைப்பதால் எல்லோரும் பாவம் செய்தனர். *ரோம 3:23 எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,*

பாவியாகிய மனுஷனால் தன் பாவ சுபாவத்தை மாற்றவோ, பாவம் செய்யாமல் இருக்கவோ முடியாது . ***எரே 13:23*** *எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்.*

மனிதனால் தன்னைத்தான் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தில் இருந்து ரட்சித்துக்கொள்ள முடியாது. தன் பாசுபாவத்தை மாற்றி, தன் பாவங்களுக்கான பரிகாரத்தை செய்ய முடியாது. அதற்கு உள்ள வல்லமை ஒன்றும் இல்லாதவனாக மனிதன் இருக்கிறான். மனிதன் மூலமாகவே பாவம் உலகத்துக்குள் பிரவேசித்தது, ஒரு மனிதன் மூலமாகவே அது களையப்பட முடியும். தேவன் தன் முன்னறிவின் படி இதற்கான பரிகாரத்தையும் செய்து வைத்திருந்தார்.

***1பேது 1:18*** *உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,*

*19 குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.*

*20 அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்.*

மனிதனுக்காக தேவன் மனிதன் ஆனார் *...**யோவா 1:14** அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

தேவன் மனிதனாக மனுக்குலத்தின் பாவங்களை எல்லாம் தன் மேல் சுமந்து ஏற்றுக்கொண்டார்.. ***யோவா 1:29*** *மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.*

**மனுக்குலம் உலகத் தொடக்கத்தில் இருந்து செய்த, செய்து கொண்டு இருக்கிற, செய்யப்போகிற ...எல்லா பாவங்களுக்குமான தண்டனைகளை அவர் ஏற்றுக்கொண்டார்...**

***1யோவா 2:2*** *நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*

மனிதன் மீண்டும் தன் ஆவியில் தேவனுடைய ஆவியோடு தொடர்பு கொண்டு ஒரு " **நித்திய ஜீவன்** " வாழ்க்கை வாழும்படியாக செய்தார்.

***யோவா 3:16*** *தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*

***யோவா 17:3*** *ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.*

***1கொரி 6:17*** *அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.*

இந்த ரட்சிப்பை தேவன் இலவசமாக, ஒரு ஈவாக எல்லோருக்கும் கொடுக்கிறார்.

***தீத் 2:11*** *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,*

***எபே 2:7*** *கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.*

*8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*

கிருபையினாலே தேவன் நமக்கு தருகிற இந்த இரட்சிப்பை, விசுவாசித்து யார் வேண்டுமென்றாலும் பெற்றுக்கொள்ளலாம். இப்படித்தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம் " **கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு** "

***எபே 2:9*** *ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;*

*நாம் ரட்சிக்கப்படுவது நம் கிரியைகளினால் அல்ல. அது தேவனுடைய ஈவு.*

இப்படி ரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் வேதாகமம் " **நீதிமான்** " என்று அழைக்கிறது.

***ரோம 3:21*** *இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.*

*22 அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமேஇல்லை.*

***ரோம 5:19*** *அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*

இப்போது மீண்டும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ***ரோமர் 5; 12- 21*** வரை உள்ள வசனங்களை படிப்போம்...

**இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவு அநேகர் மேல் அதிகமாக பெருகி இருக்கிறது.** *ரோமர்; 5;15*

**இயேசு கிறிஸ்துவின் கிருபை வரம் அநேக குற்றங்களை நீக்கி நீதி விளங்கும் தீர்ப்புக்கு ஏதுவானது .** *ரோமர்; 5;16.*

**ரட்சிக்கப்பட்டவர்கள் (** கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் **) ஜீவனை அடைந்து ஆளுவார்கள்.** *ரோமர்; 5;17.*

**ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.** *ரோமர்; 5;18*

**ரட்சிக்கப்பட்டவர்கள் எல்லோரும் நீதிமான்கள் ஆக்கப்படுவார்கள்.** *ரோமர் 5; 19.*

**இயேசு கிறிஸ்துவின் கிருபை, நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டு இருக்கிறது** *ரோமர்; 5;21.*

அருமை சகோதர, சகோதரிகளே, நம் கர்த்தருடைய இயேசுவின் கிருபையையும் அன்பையும் அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

***ரோமர்; 5; 19.*** *அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*

**எப்படி நாம் ஆதாமுடைய கீழ்ப்படியாமையினாலே பாவிகளாக்கப்பட்டோமோ.... அது போலவே இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் நீதிமான்களாக்கப்பட்டோம்............. அல்லெலூயா !**

**எப்படி நாம் பாவம் செய்யாமலேயே பாவிகளாக்கப்பட்டோமோ அது போலவே நாம் நீதிக்கிரியைகள் ஒன்றும் செய்யாமல் நீதிமான்களாக்கப்படுகிறோம்.** இது தேவனுடைய மகாப்பெரிய **கிருபை. கிருபை** என்ற வார்த்தையின் அர்த்தம் " **தகுதி அற்றவர்களுக்கு கொடுக்கப்படுகிற பரிசு** ".

***ரோம 3:21*** *இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.*

*22 அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமேஇல்லை.*

*23 எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,*

*24 இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;*

*25 தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்,*

பரலோகம் போக வேண்டும், தேவனுடய ராஜ்யத்தில் - அவருடைய ப்ரசன்னத்தில் இருக்க வேண்டும் என்றால் ஒரு மனிதனுக்கு **தேவனுக்கு இணையான நீதி** இருக்க வேண்டும். ***( சங்; 15 ; 2, மத்தேயு; 5 ; 20 ).*** தேவனுக்கு இணையான நீதி ஒரே ஒரு மனிதருக்கு மாத்திரமே உண்டு..அவர் இயேசு கிறிஸ்து..... மனிதன் யாரும் முழுமையாக நியாயப்பிரமாணத்தையும், கட்டளைகளையும் - வெளிப்படையாகவோ,மறைமுகமாகவோ கடைபிடித்தது கிடையாது. அனால் நாம் பரலோகம் செல்லவும், தேவனால் எற்றுக்கொள்ளப்படவும் **தேவனுக்கு இணையான நீதி** உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இதைதான் ***ரோமர்; 3 ; 21-22*** *சொல்லுகிறது*

*இப்படியிருக்க, நியாயப்பிரமாண மில்லாமல தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.*

***22.*** *அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமேஇல்லை.*

தேவன் நமக்கு எந்த விதமான நீதியை கொடுக்க விரும்புகிறார் என்றால் **" இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் நீதி "** இந்த நீதியானது விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும், எவர் மேலும் பலிக்கும்" நீதியில் இரண்டு வகையான நீதி உண்டு. ஒன்று **"மனிதனுடைய நீதி"** மற்றொன்று **"தேவனுடய நீதி"**. மனிதனுடைய நீதி என்பது - ஒரு மனிதனுடைய உயர்ந்த , நல்ல பழக்கங்களும், அவன் செய்கிற நல்ல செயல்களும் ஆகும். ஆனால் இவை ஒரு மனிதனை தேவனுக்கு உகந்தவனாக ஆக்க முடியாது. தன் செயல்களால் அது எந்த செயல்களாக இருந்தாலும் தான தருமங்கள், உபவாசம், ஜெபம், ஊழியங்கள், நற்குணங்கள், அன்பு, ஈகை....இப்படிப்பட்ட எந்த செயல்களையும் கொண்டு ஒரு மனிதன் நீதிமானாக தேவனுக்கு முன்பதாக நிற்க முடியாது. ஒரு வேளை நிற்க யாராவது முயற்சித்தால் அவர்களது நீதி **" கந்தல் துணியைப்போல "** இருக்கும் என்று வேதாகமம் சொல்லுகிறது.

***ஏசா 64:6*** *நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது.*

ஒரு மனிதன் தேவனுக்கு உகந்தவனாக இருக்க வேண்டும் என்றால் - அவனிடம் தேவனுக்கு இணையான நீதி இருக்க வேண்டும். இந்த நீதியைத்தான் தேவன் நமக்கு தர விரும்புகிறார்... அது **" நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவ நீதி ".**

நியாயப்பிரமாணத்தினால் வரும் நீதி என்பது - நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை செய்து, நிறைவேற்றி, சம்பாதித்து - இவைகளை எல்லாம் தேவன் நம்மை ஏற்றுக்கொள்வதற்காக செய்வது. உலகத்தின் எல்லா மதங்களும் சொல்வது - நீ பல காரியங்களை, கட்டளைகளை செய்ய வேண்டும் நிறைவேற்ற வேண்டும். அப்போது உன் தெய்வம் உன்னை ஏற்றுக்கொள்வார்.

சுவிஷேஷம் என்ற வார்த்தையின் அர்த்தம் " நற்செய்தி ". இந்த சுவிஷேஷத்தின் நற்செய்தி என்னவென்றால் " இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நமக்காக, நம் பாவங்களுக்காக மரித்து - நியாயப்பிரமாண நீதிக்கு சமமான நீதியை நமக்கு சொந்தம் ஆக்கினார். இயேசு கிறிஸ்துவை யார் எல்லாம் விசுவாசித்து, அவர் நமக்காக செய்ததை - தந்ததை யார் எல்லாம் ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் தேவன் **"தன்னுடைய நீதியை"** கொடுக்கிறார்.

இந்த நீதி தேவனுடைய நீதி...இது இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தால் வருகிற நீதி. இது இயேசுவை விசுவாசிக்கிற எவருக்கும் கிடைக்கிற நீதி. ரட்சிக்கப்பட்ட அனவருக்கும் இலவசமாக கிடைக்கிற நீதி.

தேவன் தன் நீதியை ஒரு **ஈவாக** - அன்பளிப்பாக நமக்கு தருகிறார். .......இந்த அன்பளிப்பு - நீதி- ( குற்றமற்ற நிலை - பரிசுத்தம் - தேவனுக்கு பிரியமான நிலை ) இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தால் நமக்கு கிடைக்கிறது. நாம் இதற்காக எந்த விலையும் கொடுக்க முடியாது - கொடுக்க வேண்டியது இல்லை ....ஆனால் தேவன் இதற்காக கொடுத்த விலையோ - **இயேசு கிறிஸ்துவின் ரத்தம்......ஜீவன்.....**

**அன்பு சகோதர சகோதரி... இப்போது நீங்கள் எப்படி பாவியானீர்கள்.....எப்படி நீதிமானானீர்கள் ? என்று புரிந்து கொண்டிருப்பீர்கள்.**

பாவம் செய்யாதீர்கள். என்றாலும் **சில வேளைகளில் நீங்கள் ஏதாவது தவறு செய்து விட்டால், சாத்தானும், கிருபையை அறியாதவர்களும் உங்களை குற்றப்படுத்துவார்கள். உங்கள் மனசாட்சி உங்களை குற்றப்படுத்தும். அதனால் சோர்ந்து போய், வீழ்ந்து போய், " என்னால் முடியாது " என்று சுய பச்சாபத்தில் ஆழ்ந்து போய் விடாதீர்கள். அச்சமயத்தில் எல்லாம் துணிவாக கேளுங்கள்...**

***ரோம 8:31*** *இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?*

*32 தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?*

*33 தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.*

*34 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே.*

**நீங்கள் ரட்சிக்கப்பட்டவர்கள் என்றால், மறுபடியும் பிறந்தவர்கள் என்றால் -நீங்கள் நீதிமான். அதனால் நீதியாக ஜீவியுங்கள். நீதிகிரியைகளை செய்யுங்கள். எப்போதும் தேவனுடைய அன்பில், ஆசீர்வாதத்தில் ஆனந்தமாக ஜீவியுங்கள்.**

***தீத் 2:11*** *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,* ***12*** *நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி,* ***13*** *நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப்போதிக்கிறது.*

----------------------

**Reference;** King James version Bible, The open bible, W.E.Vine's expository dictionary of Bible words, Strong's bible concordance, Dake's bible commentary, Andrew Wommack's Bible commentary, Watchman Nee's The Spiritual Man, Don Krow's Discipleship evangelism, etc…

------------------------